**Starting time 12.12 P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 286/2009**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 29.04.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : அர்ஜுனன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** வாதி என்னுடைய மருமகனா என்றால், ஆமாம். நான் சாட்சி கையொப்பம் போடப்பட்டதாக கூறப்படும் பத்திரம் என்ன பத்திரம் என்று தெரியுமா என்றால், தெரியாது. தெரியாது என்று சாட்சி முதலில் கூறிவிட்டு பின்பு கிரய பத்திரம் என்று கூறுகிறார். வாதிக்கு யார் அந்த பத்திரத்தை எழுதிக் கொடுத்தார்கள் என்றால், பொன்னுசாமி. பொன்னுசாமிக்கு அந்த சொத்து எவ்வாறு வந்தது என்றால், முதல் பிரதிவாதி 6-ஆம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார்.

2. முதல் பிரதிவாதி உயிருடன் இருந்த போதே 3-ஆம் பிரதிவாதிக்கு இதே சொத்தை பொறுத்து ஒரு தான பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால், அது இந்த சொத்து அல்ல, வேறு சொத்து. வாதி கிரயம் பெற்ற சொத்தின் செக்கு பந்தி என்ன என்றால், ஞாபகம் இல்லை. கிரயப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண் எனக்கு தெரியாது என்றால், ஆமாம். 1-ஆம் பிரதிவாதி 6-ஆம் பிரதிவாதிக்கு எந்த தேதியில் சொத்தை எழுதிக் கொடுத்தார் என்றால், தெரியாது.

3. 1-ஆம் பிரதிவாதி 6-ஆம் பிரதிவாதிக்கு என்ன பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்தார்

என்றால், கிரயப்பத்திரம். ஏற்கனவே 1-ஆம் பிரதிவாதி 3-ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை தான பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்துவிட்டதால் வாதி பெயரில் உள்ள கிரய ஆவணமே செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. வாதி என்னுடைய மருமகன் என்பதால் அவருக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 05.09.2009 தேதியன்று பிரதிவாதிகள் வாதியை தாவா சொத்தின் மீதான சுவாதீனத்தில் இடையூறு செய்ததாக நான் கூறுவதே பொய் என்றால், சரியல்ல. வாதிதான் தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருப்பதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Ending Time: 12.21 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**